**செ. கு. எண்:032** **நாள்: 17.03.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 17.3.2017

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், சந்தைப்பேட்டையில் உள்ள ஆர்.எஸ்.டி.சி உண்டு உறைவிட சிறப்பு பயிற்சி மையத்தில் படித்துக்கொண்டிருந்த செல்வன் அய்யனார் மற்றும் செல்வன் ராஜதுரை;

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், கரியம்பட்டி கிராமம் காட்டுவளவு பகுதியைச் சேர்ந்த திரு சம்பத் என்பவரின் ஒரு வயது குழந்தை; பாலக்கோடு வட்டம், கம்மாளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு காமராஜ் என்பவரின் மகள் செல்வி திரிஷா;

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், கூடலூர் கிராமம் மஜிரா வேலாயுதபுரம் கிராமத்தில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் பணி செய்து கொண்டிருந்த திரு கருப்பையா என்பவரின் மனைவி திருமதி லட்சுமி; ராதாபுரம் வட்டம், தெற்குகள்ளிகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு சேவியர் என்பவரின் மகன்திரு அந்தோணிலாசர் நிரஞ்சன்;

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், அரசடிப்பட்டி கிராமம், காமராஜபுரத்தைச் சேர்ந்த திரு ராமநாதன் என்பவரின் மகன் திரு தினேஷ்குமார்;

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், தெளிச்சாத்தநல்லூர் கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில், பேருந்தில் பயணம் செய்த திருவாடானை வட்டம் கண்ணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு மாரிமுத்து என்பவரின் மகன் திரு செல்வம் மற்றும் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு அழகுசுந்தரம் என்பவரின் மகன்திரு நாகராஜ்;

மதுரை மாவட்டம், குலமங்கலம் உள்வட்டம், பரவை 2பிட் கிராமம், மதுரை-திண்டுக்கல் மெயின்ரோட்டில் ஏற்பட்ட சாலை விபத்தில் திரு சிங்கப்பெருமாள் என்பவரின் மகன் திரு முனியாண்டி;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர்-குட்டப்பட்டு கிராமம், முத்துக்குளம் பேருந்து நிலையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் திரு முருகானந்தம் என்பவரின் மகன் திரு தினேஷ்குமார்;

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நரிவிலா கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் திரு சுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு முத்துக்காமாட்சி மற்றும் திரு முத்துக்காமாட்சியின் மனைவி திருமதி இந்துராணி;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், அயன்பொருவாய் கிராமத்தைச் சேர்ந்த திரு சின்னையா என்பவரின் மகன் திரு முத்துசாமி;

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஆய்க்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு முருகன் என்பவரின் மகள் சிறுமி ஏஞ்சல்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், மாதர்பாக்கம் மதுரா பாதிரிவேடு கிராமத்தைச் சேர்ந்த திரு பிரசாத்பாபு என்பவரின் மனைவி திருமதி அஞ்சலா;

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், கருங்காலக்குடி குரூப் வேலங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு சுவக்கீன் என்பவரின் மனைவி திருமதி சாந்தா;

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டம், குண்டல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு தமிழரசு என்பவரின் மகன் சிறுவன் சனீஸ்வரன்;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ஆசனூர் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் திரு மாயவன் மகன் திரு தர்மலிங்கம்;

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், மேபூதக்குடியைச் சேர்ந்த திரு சண்முகம் என்பவரின் மனைவி திருமதி சித்ரா;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில், மங்கலம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த சத்யா மற்றும் திரு பழனிவேல் மகன் திரு தாமரைச்செல்வம்;

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், காரைக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அரசுப் பேருந்தும், லாரியும் மோதிய விபத்தில், பேருந்தின் நடத்துனர் திரு நடராஜன் மற்றும் குளத்தூர் வட்டம், மாத்தூர் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் திரு வீரப்பன் என்பவரின் மகன் திரு சுப்பிரமணியன்;

திருவண்ணாமலை மாவட்டம், இனாம்காரியந்தல் மதுரா சத்திரம் கூட்ரோடு அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் திரு முனியன் என்பவரின் மகன் திரு நாராயணன்;

ஆகியோர் பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மேற்கண்ட 25 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**